**மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷன் ஒப்பந்தத்தின் சிறம்பம்சங்கள்**

- இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் கட்டுப்பாடாக உள்ள இரண்டு விடயங்களான பலவீனமான போக்குவரத்து உட்கட்டமைப்பு மற்றும் காணி நிர்வாக செயற்பாடு என்பவற்றை இலங்கை அரசாங்கமும், மிலேனியம் சலெஞ்ச் கோர்ப்பரேஷனும் இணைந்து அடையாளம் கண்டுள்ளன.

- இந்தத் தடைகளை நிவர்த்தி செய்ய போக்குவரத்துத் திட்டம் மற்றும் காணித் திட்டம் ஆகிய இரண்டு கட்சிதமான திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவ்விரண்டும் 480 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான திட்டங்களாகும்.

- 350 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான போக்குவரத்துத் திட்டமானது 19 வீத பொருளாதார மீள்திரும்புகையைக் கொண்டிருக்கும் என மதிப்பிடப்பட்டிருப்பதுடன், மேல், மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் நகர மற்றும் பிராந்திய போக்குவரத்தின் உட்கட்டமைப்பின் வினைத்திறனை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

- போக்குவரத்துத் திட்டமானது பௌதீக வீதி வலையமைப்பை தரமுயர்த்துவது, வாகன நெரிசல் கட்டுப்பாட்டு முறையை நவீனமயப்படுத்துவது மற்றும் கொள்கை மற்றும் ஒழுங்குமுறை சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

- இந்த முதலீடானது வாகனநெரிசலால் ஏற்படும் தடைகளைக் குறைத்து, மேலும் பாதுகாப்பான, நம்பகமான பொதுப் போக்குவரத்தை உறுதிப்படுத்தும். குறைந்த போக்குவரத்துச் செலவில் அதிகரித்துவரும் சந்தையுடன் பொதுமக்களையும் பொருட்களையும் இணைப்பதற்கான வழியை ஏற்படுத்தும்.

- 67 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான காணித் திட்டமானது 26 வீத பொருளாதார மீள்திரும்புகையைக் கொண்டிருக்கும் என மதிப்பிடப்பட்டிருப்பதுடன், காணி உரிமை தகவல் மற்றும் காணிகள் பற்றி இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் தகவல்களை மேலும் முன்னேற்றுவதற்கான முயற்சிகளை உள்ளடக்கியதாகவிருக்கும். இத்திட்டமானது முதற்கட்டமாக மத்திய, வடமேல், வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்கள் பற்றி கவனம் செலுத்துவதாக அமையும்.

- காணி செயற்பாடுகள் கையிருப்பில் உள்ள அரசாங்க காணிகள் பற்றி அறிவற்கும், நவீன முறையில் காணிகளை மதிப்பீடு செய்வதற்கும், சிறுகாணி உரிமையாளர்கள், பெண்கள் மற்றும் நிறுவனங்களுக்கான சுயாதீன உடன்படிக்கைகளை பலப்படுத்துவது, டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட காணி உறுதிகளை வழங்குவது போன்றவற்றைக் கொண்டதாக அமையும்.

- இந்த இரண்டு திட்டங்களும் இணைந்து 11.3 மில்லியன் மக்களுக்கு அதாவது இலங்கை சனத்தொகையில் 54 வீதமானவர்களுக்கு நன்மையளிப்பதாக அமையும்.

- எஞ்சியுள்ள 63 மில்லியன் டொலர்கள் தொழில்நுட்ப உதவிகள், சாத்தியக்கூறு மற்றும் வடிவமைப்பு ஆய்வுகள், திட்ட நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளுக்குப் பயன்படுத்தப்படும். இந்த நிதியுதவியானது குறித்த திட்டங்களை சரியாக வடிவமைத்து, நடைமுறைப்படுத்தி, முகாமைத்துவம் செய்து மற்றும் அவற்றைக் கண்காணிப்பதை வினைத்திறனாக முன்னெடுக்க அரசாங்கத்துக்கு உதவியாகவிருக்கும்.

- மேலே குறிப்பிடப்பட்ட திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களின் ஊடாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதை ஒருங்கிணைக்க இலங்கை அரசாங்கமானது இலங்கையர்களைக் கொண்ட உள்ளூர் நிறுவனமொன்றை உருவாக்கும். இந்த நிறுவனமானது எட்டு அரசாங்க அதிகாரிகள், மூன்று தனியார்துறை அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இலங்கையர்களைக் கொண்ட பணிப்பாளர் சபைக்குப் பொறுப்புக் கூறுவதாக அமையும்.